உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 18.07.2026 • மலர் 04 • இதழ்: 199 • சனிக்கிழமை • Edition : Nagercoil • 18.07.2026 • Vol : 04 • Issue : 199 • Page : 4 • Rs. 5/-

# இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரெயில் சேவை

## பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்



கவுகாத்தி, ஜூலை 18

ஜிந்திலிருந்து சோனிபட் வரை நாட்டின் முதல் ஹைட்ரஜன் ரெயிலை பிரதமர் நரேந்திர மோடி, கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்தியாவில் ஹைட்ரஜன்எரிபொருளில்இயங்கும்வகையிலானரெயில் என்ஜினை தயாரிக்க கடந்த 2022ம் ஆண்டு முயற்சிகள்தொடங்கின.

கடந்த 202021ம் ஆண்டில் ரூ.136 கோடி மதிப்பீட்டில் வடக்கு மண்டல ரெயில்வே இந்தத் திட்டத்தை 2022, ஏப்ரலில் தொடங்கியது. இந்தத் திட்டத்துக்கான டெண்டர் ஐதராபாத்தைச் சேர்ந்த மேதா என்ற நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இந்நிறுவனம்தான் எரிபொருட்களை சப்ளை செய்கிறது.

ஹைட்ரஜன் ரெயிலை வடிவமைக்கும் பணிகள் சென்னை பெரம்பூரில் உள்ள ரெயில் பெட்டி தொழிற்சாலையில் நடைபெற்றன. பணிகள் முடிந்ததைத் தொடர்ந்து சோதனை ஓட்டங்களும் நடந்தன.

இதையடுத்து, ரெயிலை அறிமுகப்படுத்த கடந்த மே மாதம் 22ம் தேதி ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்தது.

அரியானாவின் ஜிந்த் ரெயில் நிலையத்தில் இருந்து இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரெயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். 2,800 பேர் பயணிக்கும் வகையில் இது வடிவமைக்கப் பட்டுள்ளது.

அரியானாவின் ஜிந்த் சோனிபட் இடையே அதிநவீன ஹைட்ரஜன் ரெயில் சேவை இன்று முதல் இயக்கப்படுகிறது.

டீசல் ரெயில்களுக்கு மாற்றான ஹைட்ரஜன் ரெயிலில் இருந்து நீரும், நீராவியும் மட்டுமே கழிவாக வெளியேறும்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் ரெயில், கார்பன் உமிழ்வை பூஜ்ஜியமாக குறைக்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 10 பெட்டிகளுடன் அமைக்கப்பட்டுள்ள ஹைட்ரஜன் ரெயில் மணிக்கு 75 கி.மீ வேகத்தில் செல்லும் திறனுள்ளது.




தூத்துக்குடி மாவட்டம், தூய மரியன்னை பெண்கள் கல்லூரியில் இன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் உலக மக்கள் தொகை தினம் 2026ஐ முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜன், அவர்கள் தலைமையில் அனைவரும் எடுத்துக்கொண்டனர்.இந்நிகழ்வில் இணை இயக்குநர் (நலப்பணிகள்) (பொறுப்பு) மற்றும் துணை இயக்குநர், மருத்துவம் ஊரகப்பணிகள் மற்றும் குடும்பநலம் பொன் ரவி, துணை இயக்குநர்கள் சுந்தரலிங்கம் (காசநோய்), யமுனா (தொழுநோய்), மருத்துவ கண்காணிப்பாளர் பத்மநாபன், ரோட்டரி சங்கத் தலைவர், உறுப்பினர்கள், மாவட்ட விரிவாக்க கல்வியாளர்கள், வட்டார சுகாதாரப் புள்ளியாளர்கள் மற்றும் குடும்பநலம் சார்ந்த அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கோவை கொடிசியாவில் புத்தகத் திருவிழா




கோவை ஜூலை:18

இன்றையஇளம்தலைமுறையினரிடம்புத்தகவாசிப்புப் பழக்கம் இல்லை என்பது பொதுவாக நிலவும் கருத்து. ஆனால், கோவை புத்தகத் திருவிழாவிற்கு ஒருமுறை வந்து பார்த்தால், அந்தக் கருத்து உண்மையல்ல என்பதை எளிதில் உணர முடியும்.

பலரும்தங்களுக்குப்பிடித்தபுத்தகங்களைஆர்வத்துடன் தேடித்தேர்ந்தெடுத்துவாங்குவதையும்,குடும்பங்களுடன் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை புத்தக அரங்குகளில் உற்சாகமாகச் சுற்றி வருவதையும் முடியும். காண ஒவ்வொரு ஆண்டும் கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தில் கோவை புத்தகத் திருவிழா நடக்கும். இது மேற்கு தமிழகத்தின் மிகப்பெரிய புத்தக விழாவாகும். அந்த வகையில் இந்த ஆண்டிற்க்கான கோவை புத்தகத் திருவிழா 2026 ஜூலை 17ம் தேதி தொடங்கி 26ம் தேதி வரை நடைபெற உள்ளது. கோவை மாவட்ட நிர்வாகம், பள்ளிக்கல்வித் துறை, கொடிசியா அமைப்பு ஆகியவை இணைந்து இதனை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகின்றன.இதில் 2 லட்சத்துக்கும் அதிகமான புத்தகங்கள், 300க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம்பெறுகின்றன. புத்தக கண்காட்சியுடன் கலை மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகளும் நடைபெறும். மாணவ, மாணவிகள் பங்கு பெறும் இலக்கிய நிகழ்வுகள், கவியரங்குகள், கதை சொல்லும் நிகழ்வுகள், பேச்சுப்போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியவையும் வழக்கமாக நடைபெறும்.புகழ் பெற்ற இலக்கிய ஆளுமைகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பிரபல தலைவர்கள் கலந்து கொள்ளும் கலை, இலக்கிய நிகழ்வுகள் தினமும் கண்காட்சி வளாகத்தில் நடைபெற உள்ளன. எழுத்தாளர்களுடனான சந்திப்புகள், இலக்கிய உரையாடல்கள், புதிய நூல்களின் அறிமுகங்கள் ஆகியவையும் இடம்பெறும். காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.மனம் விரும்பும் புத்தகங்களைத் தேடி, வாங்கி, வாசிப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்க வாருங்கள்.

### பட்டுக்கோட் டை அருகே

# பள்ளி எதிரே புகையி லை பொருட்கள் விற்றவருக்கு ரூபாய் 25,000 அபராதம்: பெட்டி கடைக்கு சீல்

தஞ்சாவூர் ஜூலை 18

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட் டை அருகே பள்ளிக்கூடம் எதிரே தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருள்களை விற்ப னை செய்தவருக்கு ரூபாய் 25,000 அபராதம்விதித்ததோடு, பெட்டி கடைக்கு அதிகாரிகள் சீல் வைத்து நடவடிக்கை எடுத்தனர்

தமிழக அரசின் உத்தரவின்படி பள்ளி கல்லூரிக்கு எதிரே உள்ள பெட்டி கடைகள் மற்றும் மளிகை கடைகளில் புகையிலை பொருள்களை விற்பனை செய்யக்கூடாது இருப்பினும் சில கடைகளில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருள் கள் விற்பனை செய்யப்படுவதால் மாணவர்கள் அவற்றை பயன்படுத் தி போதைக்கு அடிமையாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை தடுக்க தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்ஆய்வு மேற்கொள் ளப்பட்டு வருகிறது. அதன்படி பட்டுக்கோட்டை அருகே புனவாசலி ல்உள்ள புனித ஆரோக்கிய அன்னை அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி எதிரே செயல்பட்டு வந்த பெட்டிக்கடையில் கோட்ட கலால் அலுவலர் ஐயம் பெருமாள் தலைமையில் மதுவிலக் கு போலீசார், உணவு பாதுகாப்பு துறை அலுவலர்ரஹி முனிஷா, போலீஸ் ஏட்டுகள் சரவணன், முருகேசன் உள்ளிட்டோர் திடீர் சோதனை செய்தனர்

அப்போது தமிழக அரசு தடை செய்யப்பட்ட ஹான்ஸ், கூலிப், சிகரெட் உள்ளிட்ட புகையிலை பொருட்கள் சுமார் 10 கிலோ அளவில் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது .அவை அனைத்தும் பறிமுத ல் செய்யப்பட்டன. இதையடுத்து அந்த பெட்டி கடைக்கு அதிகாரிகள் சீல் வைத்து, ரூபாய் 25,000 அபராத ம் விதித்து நோட்டீஸ் வழங்கினர்.

இந்த நடவடிக்கை இப்பகுதியில் பரபரப்பு ஏற்படுத்தியது.

# நாகர்கோவில் சிறையில் அடித்து கொலை செய்யப்பட்ட சபரிவர்மனின் உடல்

## மனைவி மற்றும் உறவினர்கள் 5 நாட்களுக்கு பின் உடலை பெற்றுக்கொண்டனர்



நாகர்கோவில், ஜூலை.18

கன்னியாகுமரி மாவட்டம் சாமித்தோப்பு அருகே ஈத்தங்காட்டை சேர்ந்தவர் சபரிவர்மன்(33). மாற்றுத்திறனாளியான இவர், வீட்டருகே நடத்தி வந்த பெட்டிக்கடையில் குட்கா புகையிலை விற்றதாக கடந்த 9ந் தேதி கைது செய்யப்பட்டு நாகர்கோவில் உள்ள மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் அவர் கடந்த 13ந் தேதி அதிகாலை அவர் இறந்த நிலையில், ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பிரேத பரிசோதனையில் சபரிவர்மன் அடித்து கொலை செ'ய்யப்பட்டது உறுதியானது. 19 இடங்களில் காயங்கள் இருப்பது தெரியவந்தது.

இதை தொடர்ந்து அவரை சிறையில் வைத்து தாக்கியதாக வார்டன்கள் ஜெகன், திருமலைநம்பி, சிவகுமார் ஆகிய 3 பேரும், 8 சிறை கைதிகளும் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் சபரிவர்மனின் குடும்பத்தினர், அவரது பிரேத பரிசோதனை வீடியோவை தங்களுக்கு நம்பிக்கையுள்ள மருத்துவர்கள் மூலம் மறுஆய்வு செய்த பின்னரே அவரது உடலை பெற்றுக்கொள்வதாக தெரிவித்தனர். இதனால் 4 நாட்களாக சபரிவர்மனின் உடலை பெற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு ஈத்தங்காட்டில் உள்ள சபரிவர்மனின்வீட்டிற்குஅமைச்சர்கள் ராஜேஷ்குமார், ஸ்ரீநாத், குமரி மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், எஸ்பி ஸ்டாலின் ஆகியோர் சென்றனர். அவர்கள் சபரிவர்மனின் மனைவி ஆனந்தவல்லி, மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, சபரிவர்மனின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை, ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்கப்படும். அத்துடன் உடலை பெற்றுகொள்ள வேண்டும் என்றார். இதற்கு, உடற்கூறாய்வு வீடியோவை ஆய்வு செய்த பின்னர் பிரேத பரிசோதனையில் எங்களுக்குள்ள சந்தேகம் தீரும். அதன் பின்னர் உடலை பெற்றுக்கொள்வதாக தெரிவித்தனர்.

அதன்படி நேற்று சபரிவர்மனின் உடற்கூறாய்வு குறித்த வீடியோ காட்சிகளை அவரது குடும்பத்தினர், மற்றும் அவர்கள் தரப்பிலான மருத்துவர் முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது. அதில், சந்தேகத்திற்கிடமான அம்சம் ஏதும் இல்லை என்பதை குடும்பத்தினர் ஒத்துக்கொண்டுஉடலை வாங்க சம்பதித்தனர்.

அதன்படி சபரிவர்மன் இறந்து 5வது நாளான நேற்று மாலை ஆசாரி பள்ளம் அரசு மருத்துவமனை பிணவறையில் இருந்து அவரது உடலை மனைவி ஆனந்தவல்லி மற்றும் உறவினர்கள் பெற்றுக்கொண்டனர். அவரது ஊரில் உடல் அடக்கம் செய்யப்படுகிறது. இதனால் கடந்த 5 நாட்களாக நீடித்த சிறையில் கொலையான சபரிவர்மனின் பிரச்சினை முடிவிற்கு வந்தது.

# ஸ்ரீ ராஜ கணபதி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா



சென்னை, ஜூலை 18

சென்னை, ஓஎம்ஆர் சாலை, நாவலூரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ராஜ கணபதி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக ஊர் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்றது. வேண்டுவோருக்கு வேண்டும் வரம் தந்து அப்பகுதி வாழ் மக்களை காத்து அருள் பாலித்து கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ ராஜகணபதிக்கு நிகழும், பராபவ வருடம் ஆனி மாதம் 32 ஆம் தேதி, வியாழக்கிழமை அன்று சிம்ம லக்கனத்தில் சுபயோக சுபதினத்தில், கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர், வருகை தந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, நாவலூர் ஊராட்சி மன்ற தலைவர் மகாலட்சுமி ராஜாராம், துணைத் தலைவர் கிருஷ்ணன், மற்றும் வார்டு உறுப்பினர்கள் கோவில் நிர்வாகிகள் இணைந்து சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர்,

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# நடந்து வரும் வளர்ச்சிப் பணிகளை விரைந்து தரமாக முடிக்க வேண்டும்: முரசொலி எம்பி வலியுறுத்தல்



தஞ்சாவூர் ஜூலை 18

தஞ்சாவூர் மாவட்டக லெக்டர்அலுவலககூட்டரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் நடைபெற்றது

கூட்டத்திற்கு கண்காணிப்பு குழு தலைவர் முரசொலி எம்பி தலைமை தாங்கினார். இணைதலைவர் சுதா எம்பி, கல்யாண சுந்தரம் எம் பி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கலெக்டர் ரேவதி எம்எல்ஏக்கள் வைத்தியலிங்கம்,கோவி. செழியன்,அண்ணாதுரை,

அசோக்குமார், துரைசந்திரசேகரன் விஜய் சரவணன், மேயர்கள் (பொறுப்பு)டாக்டர் அஞ்சுகம் பூபதி தஞ்சாவூர்,சரவணன் கும்பகோண ம், மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், நுகர் பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் செல்வம் ,மாநகராட்சி ஆணையர்தீபனா விஸ்வேஸ்வரி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தேவநாதன், மாவட்ட வன அலுவலர் கார்த்திகேயனி, பயிற்சி கலெக்டர் சுபாஷ் கார்த்திக், துணை மேயர் தமிழழகன், ஆகி யோர் முன்னிலை வகித்தனர்

கூட்டத்தில் முரசொலி எம்பி பேசுகையில் : வேளாண்மை, தோட்டக்கலை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மின்வாரி யம், ஊரக ஒருங்கிணைந்த பள்ளி கல்வி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், ஊரக வளர்ச் சி மற்றும் ஊராட்சி துறை, மாநக ராட்சிகள், நகராட்சிகள், பேரூராட் சிகள், சுகாதாரத்துறை, மாவட்ட தொழில் மையம், உணவு பொருள் வழங்கள், சமூக பாதுகாப்பு திட்டம், சத்துணவு திட்டம் உள்ளிட்ட அனை த்து துறைகளின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப் பட்டது

மேலும் மேலாண்மை துறையின் தேசிய மேலாண்மை வளர்ச்சி திட்டங்கள், பாரம்பரிய வேளாண் மை வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம் ,மண் வள அட்டை, பயிர்க் காப்பீடு திட்டம், தோட்டக் கலை துறையின் பிரதமர் நுண்ணீர் பாசன திட்டம் ,ஒருங்கிணைந் த பள்ளி கல்வி துறையின் மாற்றுத் திறனாளிகள் குழந்தைகளுக்கான கல்வி மற்றும் பள்ளி செல்லாத குழந்தைகள் நிலவரம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டன

அனைத்து துறைகளும் மேற் கொண்டு வரும் வளர்ச்சி பணி களை விரைவாகவும் தரமாகவும் முடித்து பொதுமக்கள் பயன் பாட்டி ற்கு கொண்டு வருவதுடன் களப் பணிகளையும் சிறப்பாக செயல் படுத்த வேண்டும் என்றார்

## குழித்துறை அரசு மருத்துவமனை முன்பு

# மீண்டும் சாலையோர கடைகள்; மக்கள் புகார்



மார்த்தாண்டம், ஜூலை.18

குமரி மாவட்டத்தின் 2வது பெரிய நகரப் பகுதி மார்த்தாண்டம் ஆகும். இந்த நகரின் தேசிய நெடுஞ்சாலையோரம் குழித்துறை அரசு மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையில் கிள்ளியூர், விளவங்கோடு தொகுதிகளுக்குட்பட்ட பொது மக்கள் பயன் பெற்று வருகின்றனர். இந்த மருத்துவ மனையின் நுழைவு வாயில் பகுதியில் சாலையோரம் போக்குவரத்து மற்றும் மக்கள் நடந்து செல்வதற்கு இடையூறு செய்யும் வகையில் கடைகள் அமைக்க பட்டு இருந்தது. மேலும் அந்த இடத்தில் பல்வேறு சட்ட ஒழுங்கு பிரச்சனைகளும் ஏற்பட்டது. இது குறித்து பொது மக்கள் புகார் அளித்து அப்போதைய கலெக்டர் அழகுமீனா மற்றும் நெடுஞ்சாலை துறையால் கடைகள் அப்புறப்படு த்த பட்டது. தற்போது குழித்துறை நகராட்சி நிர்வாகத்தின் ஆசியுடன் மீண்டும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சரியான அனுமதி இல்லாமல் சாலையை ஆக்கிரமி ப்பு செய்து கடைகள் அமைக்க பட்டுள்ளது. எனவே பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடைப்பாதையில் உள்ள கடைகளை நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்து உள்ளனர்.

# மாநில துணை பொதுச்செயலாளராக தேர்வு



திருப்பூர் ஜூலை:18

லட்சிய ஜனநாயக கட்சியின் மாநிலதுணைபொதுச்செயலாளராக குளோபல் மு. பூபதி தேர்வு செய்யப்பட்டார் என்னை நியமனம் செய்த லட்சிய ஜனநாயக கட்சியின் நிறுவனத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் MLA அவர்களுக்கும் பரிந்துரை செய்த மாநில பொதுச் செயலாளர் த. நெல்லை ஜீவா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அன்புடன் குளோபல் டாக்டர் மு.பூபதி மாநில துணைப் பொதுச் செயலாளர் லட்சிய ஜனநாயக கட்சி ( LJK




கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த என்.தட்டக்கல் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ் மகன் முல்லைவேந்தன் என்பவருக்கு சொந்தமான டிராக்டரில் என். தட்டக்கல் கிராமத்தில் உள்ள ஆலமரத்து குட்டையில் நொரம்பு மண் ஏற்றி வந்தபோது இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த நாகரசம்பட்டி காவல் ஆய்வாளர் தொல்காப்பியம் அந்தவழியாகவந்துகொண்டிருந்தபோது மண்ஏற்றிவந்தடிராக்டர்டிரைவர்காவலர்களை பார்த்தும் வண்டியை பாதி வழியிலேயே நிறுத்திவிட்டு ஓடிவிட்டான் இந்த வண்டியில் பதிவெண் இல்லாத டிராக்டர் மற்றும் ட்ரெய்லர் வாகனத்தை பிடித்து பறிமுதல் செய்து நாகரசம்பட்டி காவல் வழக்கு பதிவு செய்தனர் தப்பி ஓடிய டிரைவரை போலீசார் தேடி வருகின்றனர்

# ஒனிடா ரீவைர்டு': ஒனிடா எலக்ட்ரானிக்ஸ் ன் வளர்ச்சி திட்டம் 100 அங்குல டிவி அறிமுகம்



சென்னை, ஜூலை 18,

இந்தியாவின் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டுகளில் ஒன்றான ஒனிடா எலக்ட்ரானிக்ஸ் ஒனிடா ரீவைர்டு' என்ற தனது வளர்ச்சிப் பயணத்தின் அடுத்தகட்ட திட்டத்தை அறிவித்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, தனது பிரீமியம் தயாரிப்பான 100அங்குல க்யூ டி மினி எல்இடி டிவியை இந்நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக வாடிக்கையாளர்களிடம் பெற்றுள்ள நிலையில் நம்பிக்கையின் அடிப்படையில், பிரீமியம் நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிரிவில் தனது நிலையை மேலும் வலுப்படுத்தும் இந்நிறுவனத்தின் நீண்டகால வளர்ச்சி உத்தியாக ஒனிடா ரீவைர்டு தொடங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஒனிடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குனர் குஞ்சன் ஸ்ரீவஸ்தவா கூறுகையில், 'ஒனிடா ரீவைர்டு என்பது, எங்களது அடுத்த கட்ட வளர்ச்சியுடன் கூடிய மேலும் நுகர்வோர் தொழில்நுட்ப நிறுவனத்தை உருவாக்குவதற்கான எங்களது தொலைநோக்குப் பார்வையாக உள்ளது. தரமான தயாரிப்புகள், சில்லரை வர்த்தகம், சேவைத்திறன்கள் மூலம் வாடிக்கையாளர்களின் தேவையறிந்து உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் சென்னை மற்றும் தமிழ்நாடு சந்தை எங்களின் நிறுவனத்திற்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

அடுத்த 23 ஆண்டுகளில் இந்தியாவில் 100 புதிய அவுட்லெட்களும் இன்னும் ஒரு வருடத்தில் 400 க்கும் மேற்பட்ட சேவை கூட்டாளர்களை உள்ளடக்கி வாடிக்கையாளர் சேவை அமைப்பை மேம்படுத்தவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்று தெரிவித்தார் .

# சேலத்தில் அம்பேத்கர் சிலை திறக்க கோரி கண்டன ஆர்ப்பாட்டம்




சேலம், ஜூலை 18

சேலத்தில் நேற்று காலை சேலம் மண்டல செயலாளர் பழனிசாமி தலைமையில் சேலம் மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியம் ஒதியத்தூரில் உள்ள பாபா சாஹிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிலையை திறக்க வலியுறுத்தியும், கைதுசெய்யப்பட்ட தலித் மக்களின் மீது போடப்பட்ட வழக்கை ரத்து செய்து அவர்களை விடுதலை செய்ய வேண்டி சேலம் மாநகராட்சி அலுவலகம் அருகே உள்ள கோட்டை மைதானத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# தலைவர் சிவ.இளங்கோ 91 வது பிறந்தநாள் விழா



மதுரை, ஜூலை 18

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் ஈடு இணையற்ற ஒப்பற்ற தலைவராக திகழ்ந்த தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் அனைத்து நிலை பணியாளர்களுக்கும் பாதுகாவலனாக முன் களப்பணியாளராக பணியாற்றி அனைவரின் கோரிக்கைகளை ஐந்துக்கும் மேற்பட்ட முதலமைச்சர்களுக்கு கொண்டு சென்று நிறைவேற்றிக் கொடுத்து அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்களின், அனைத்து நிலை பணியாளர்களின் கவனத்தையும் தன்பால் கவர்ந்து, வாழ்ந்த செம்மல் நம்மிடையே இருந்து மறைந்தாலும் கோரிக்கைகள் பெற்றுள்ள பலன்கள் மூலம் வாழ்ந்து கொண்டிருக்கும் உத்தம தலைவன் தானைத் தலைவர் அமரர் சிவ. இளங்கோ அவர்களின் 91 வது பிறந்தநாள் விழா தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மதுரை மாவட்ட மையம் சார்பாக மாவட்டத் தலைவர் இளங்கோ அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவர் மகேந்திர குமார் மாநில பொதுச்செயலாளர் மாரிமுத்து மாநில பொருளாளர் திலகர் உள்ளிட்ட மூத்த நிர்வாகிகளும் கூட்டமைப்பு தலைவர்களும், மதுரை மாவட்டத்திலுள்ள மாவட்ட, வட்டக்கிளை இணைப்புச் சங்க நிர்வாகிகளும் ஓய்வு பெற்ற தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

# ஸ்ரீவைகுண்டம் புனித சந்தியாகப்பர் ஆலயத் திருவிழா கொடியேற்றம்



ஸ்ரீவைகுண்டம், ஜூலை 18

ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள புனித சந்தியாகப்பர் ஆலய ஆண்டுத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. திருவிழா கொடியேற்றத்தை முன்னிட்டு நேற்று (ஜூலை 16) அதிகாலை 5.15 மணிக்குத் திருப்பலியும், காலை 6.30 மணிக்கு ஊர் பொதுமக்கள் மற்றும் மீனவ மக்களுக்காகப் பங்குத்தந்தை தலைமையில் சிறப்புத் திருப்பலியும் நடைபெற்றன. மதியம் 12 மணிக்கும் சிறப்புத் திருப்பலி நடத்தப்பட்டது. மாலை 4 மணிக்கு அலங்கரிக்கப்பட்டவாகனத்தில்புனிதசந்தியாகப்பரின் சொரூபம் குருசு ஆலயத்திலிருந்து முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, மாலை 6 மணிக்குக் கோவிலை வந்தடைந்தது. இரவு 7.15 மணிக்குக் கொடிகள் மந்திரிக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது.

தொடர்ந்து,மறையுரையும்நற்கருனைஆராதனையும் நடந்தது. திருவிழாக் நாட்களில் தினமும் காலை 5.30 மணிக்கும் 6.30 மணிக்கும் திருப்பலியும் மாலை 6.30 மணிக்கு திருயாத்திரை திருப்பலியும் நற்கருனை ஆராதனையும் நடக்கிறது.

ஜூலை 21ம் தேதி அன்னதானம் நடைபெறுகிறது. ஜூலை 25ம் தேதி 10ம் திருவிழாவை முன்னிட்டு அதிகாலை 4.30 மணி, காலை 5.10 மணி, காலை 5.50மணி, காலை 7 சிறப்பு திருப்பளி நடைபெறுகிறது. காலை10மணிக்கு தேர்பவனியாக ஆலயத்திருத்தேரில் மாதாவும், சப்பரத்தில் புனித சந்தியாகப்பரும் வீதியுலா வருகின்றனர்.

12 மணிக்கு சிறப்பு திருபயணிகளுக்காக திருபலியும் நடக்கிறது. ஏற்பாடுகளை குருசுகோவில் பங்குதந்தை, அருட் சகோதரிகள், பங்குபேரவையினர், ஊர்நலக்கமிட்டியினர்,இறைமக்கள்செய்துருகின்றனர். பெரியதாழை,உவரி, மணப்பாடு, ஆலந்தலை, படுக்கப்பத்து, இடிந்தகரை, கூடுதாலை, தூத்துக்குடி, அமலிபுரம், கடலோரமீனவமக்கள்அதிகளவில்கலந்து கொண்டனர்.



தருமபுரிமாவட்டம்ஆழிவாயன்கொட்டாய்கிராமத்தில்அமைந்துள்ளஸ்ரீபாப்பாரப்பட்டி மாரியம்மன் திருக்கோவிலில் 27 ம் ஆண்டு ஆடி மாத பிறப்பை முன்னிட்டு அம்மனுக்கு அதிகாலையில்சிறப்புஅபிஷேகங்கள்,ஆராதனைகள்நடைபெற்றது.இதைத்தொடர்ந்து ஆஞ்சநேயர் திருக்கோவிலிருந்து பக்தர்கள் அழகு குத்திக்கொண்டும், பூ கரகம், பால்குடம், தீர்த்தகுடம் மற்றும் தீச்சட்டி ஆகியவைகளை எடுத்துக் கொண்டு ஊர்வலமாக ஸ்ரீ பாப்பாரப்பட்டி மாரியம்மன் திருக்கோயில் சென்று நேர்த்திக்கடன் செலுத்தினர். இந்த திருவிழாவை ஒட்டி தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் இருந்தும் பக்தர்கள், பொதுமக்கள்திரளாக கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். திருக்கோவில் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. திருவிழாவை ஒட்டி காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## அவதானப்பட்டி அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவிலில்

# கணபதி பூஜை மற்றும் கொடியேற்றம் நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி, ஜூலை 18

ஆடி மாதம் என்றாலே அம்மன் வழிபாட்டிற்குரிய மிகவும் தெய்வீகமான மாதமாகும். அதிலும் குறிப்பாக ஆடி வெள்ளிக் கிழமைகளில் அம்மனை வழிபடுவது சகல சௌபாக்கியங்களையும் தேடித்தரும். இந்த ஆண்டு 2026இல் ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 16 வரை ஆடி மாதம் நீடிக்கிறது. இந்த ஆண்டின் சிறப்பு என்னவென்றால், ஆடி மாதத்தின் முதல் நாளே ஆடி வெள்ளிக்கிழமையாகத் தொடங்குகிறது. 2026ஆம் ஆண்டின் ஆடி முதல் வெள்ளி நாளினை முன்னிட்டு கிருஷ்ணகிரி சேலம் ரோட்டில் உள்ள அவதானப்பட்டி அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் அதிகாலை முதலே ஏராளமான பெண்கள் சுவாமி தரிசனம் செய்ய குவிந்தனர். இங்கு உள்ளூர் பக்தர்கள் மட்டுமின்றி வெளியூர்பக்தர்களும், அண்டை மாவட்டத்தை சேர்ந்த ஏராளமானோர்வந்து வழிபட்டு செல்வது வழக்கம். பிரசித்தி பெற்ற அவதானப்பட்டி மாரியம்மன் கோவிலில் அறங்காவலர் குழு தலைவர் திருப்பதி கவுண்டர் தலைமையில் ஆடி 1 முதல் ஆடி 27ம் தேதி வரை, 262ம் ஆண்டு அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருவிழா மிக பிரம்மாண்டமாக நடைபெறுகிறது. இதை ஒட்டி இன்று அதிகாலை 9 மணிக்கு கணபதி பூஜை மற்றும் கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் பக்தர்கள் அனைவருக்கும் விபூதி, குங்குமம் பிரசாதம் விழா குழுவினர் வழங்கினார்கள். ஏராளமான பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடனைசெலுத்த சக்கரைபொங்கல், வெண்பொங்கல், தயிர் சாதம், புளி சாதம் உள்ளிட்ட பிரசாதங்களை கொண்டு வந்து பக்தர்களுக்கு வழங்கினார்கள். ஏராளமான கிராம மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அலங்கரிக்கப்பட்டிருந்த அவதானப்பட்டி ஸ்ரீமாரியம்மனை தரிசனம் செய்தனர். வரும் ஆகஸ்ட் 3, 4, 5, ஆகிய தேதியில் நடைபெறவிருக்கும் திருவிழாவில் பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொள்ளுமாறு ஸ்ரீ அருள்மிகு அவதானபட்டி மாரியம்மன் திருவிழா குழுவினர் கேட்டுக்கொண்டனர். பரம்பரை அறங்காவலர் குழு தலைவர் சேர்மன் சி.ஆர்.திருப்பதி கவுண்டர் தலைமையில் நடைபெறவிருக்கும் 262 ஆம் ஆண்டு அவதானப்பட்டி ஸ்ரீமாரியம்மன் திருவிழாவில் பரம்பரை அறங்காவலர் உறுப்பினர்களான சி. மாரியப்பகவுண்டர், பி.மாரியப்பன்கவுண்டர், திருப்பதிகவுண்டர், மகேந்திரகவுண்டர், சீனிவாசகவுண்டர், கிருஷ்ணமூர்த்திகவுண்டர், ஆகியோர் முன்னிலையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்ச்சியில் தர்மபுரி இணை ஆணையர் கிருஷ்ணன், கிருஷ்ணகிரி துணை ஆணையர் ராஜா, தர்மபுரி கோட்டை மல்லிகா அர்ச்சுனன் திருக்கோயிலின் செயல் அலுவலர் சத்யா, காவேரிப்பட்டினம் ஆய்வாளர் ராமமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். ஆகஸ்ட் 5ஆம் தேதி பிரம்மாண்டமாக நடைபெறவிருக்கும் மாரியம்மன், பூங்காவனத்தம்மன், காளியம்மன், சக்தி மாரியம்மன் கரகம் எடுத்து பம்பை ஆட்டம், சிலம்பாட்டம், விளக்குமாவு எடுத்தல், சாமி வேடம் இடுதல், சிவன், பார்வதி, கிருஷ்ணன், ராதை, ருக்கு, மகாமுனிவர், வேதவியாசர், நாதர் வேடம் இடுதல், அம்மாவிற்கு முன் வேடம் இடுதல், கேரளாசண்டிமேளம் ஆடுதல், அம்மனுக்கு கிடா வெட்டுதல், ஆகிய நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதாகவும் விழா குழுவினர் தெரிவித்தனர். மிக பிரம்மாண்டமாக நடைபெறவிருக்கும் இத்திருவிழாவிற்கு பக்தர்கள் அனைவரும் வந்திருந்து அம்மன் அருளை பெற்று செல்லுமாறும் நிகழ்ச்சிகளை கண்டு களிக்குமாறும் அவதானப்பட்டி, அனைத்து ஊர் பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் சார்பில் கேட்டுக்கொண்டனர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கு 3,902 பேர் தேர்வு: கலெக்டர் ரேவதி தகவல்




தஞ்சாவூர் ஜூலை 18

தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிக்கு 3,902பேர் பேர் தேர்வு செய்யப் பட்டுள்ளனர் என்று மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்தார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற் றது .இந்த நிகழ்ச்சிக்கு கலெக்டர் ரேவதி தலைமை தாங்கி,தொடங்கி வைத்தார்

எம்பிகள்முரசொலி, சுதா, எம்எல்ஏக்கள் துரை சந்திரசேகரன் அசோக்குமார் , விஜய் சரவணன், வருவாய் அதிகாரி தியாகராஜன், மாநகராட்சி ஆணையர் கள் தீபனா விஸ்வேஸ்வரி (தஞ்சாவூர்), சுதா (கும்பகோணம்) ஊரக வளர்ச்சி முகமைதிட்ட இயக்குனர் தேவநாத ன் ,ஆகியோர் முன்னிலை வகித்தனர்

விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து கலெக்டர் ரேவதி பேசுகையில் இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது கணக்கெடுப்பு முழுவதும் தொழில் ரீதியாகவும் ,சுய கணக்கெடுப்பு முறையிலும், முதல் முறையாக நடைபெற உள்ளது .முதல் கட்டமாக வீட்டு பட்டியல் மட்டும் வீடுகள் கணக்கெடுப்பு பணி தொடங்கி 15 நாட்கள் நடைபெற உள்ளது. இரண் டாவது கட்டமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 ஆம் ஆண்டு நடைபெற உள்ளது

தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு செய்வதற் கு நகரம் மற்றும் கிராமம் வாரியாக தொடர்புடைய நகராட்சி ஆணையர் கள், பேரூராட்சி செயல் அலுவலர் கள் மற்றும் தாசிதார்கள் என 32 பொறுப்பு அலுவலர்களின் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் மாநகராட்சிக்கு முதன்மை கணக்கெடுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு தலா 4 பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 3,902 கணக்கெடுப்பாளர் மற்றும் கண்காணிப்பாளர்களாக ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் தேர்வு செய்யப்பட்டு ,மூன்று கட்டங்களாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிற து . பொது மக்கள் அனைவருக்கு மse.census.gov.in என்ற இணைதளம் மூலமாகவும் கியூ ஆர் கோடு மூலமும், கணக்கெடுப்பில் பங்கேற்று தங்களுடைய சுய விவரங்களை தாங்களே பதிவேற்றம் செய்யலாம் பதிவேற்றம் செய்யப்பட்டது உறுதி செய்ய கணக்கெடுப்பாளர் தங்கள் வீட்டுக்கு வருகை தரும் போது அவர்களிடம் அந்த பதிவேட்ட எண்ணை தெரிவிக்க வேண்டும் என்றார்

## பிள்ளையார்புரம்

# சிவந்தி ஆதித்தனார் கல்லூரியில் போதையில்லா தமிழகம் என்ற கருத்தரங்கம்



சுசீந்திரம்.ஜீலை.18

பிள்ளையார்புரம் சிவந்தி ஆதித்தனார் கல்லூரியில் போதையில்லா தமிழகம் என்னும் தலைப்பில் கருத்துரை நடைபெற்றது. விழாவில் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் டாக்டர்.கே.அழகேசன் வரவேற்புரை ஆற்றினார். மூத்த பேராசிரியரும், கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினருமாகிய டாக்டர்.ஏ.சந்திரசேகர் தலைமையுரை ஆற்றினார்.

நிகழ்வில் சுசீந்திரம் காவல்துறை உதவி ஆய்வாளர் தனீஷ் லியோன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களுக்கு போதையின் கொடுமைகளை பற்றியும், சாலை பாதுகாப்பு விதிகளை பற்றியும் எடுத்துக் கூறினார். தமிழ்த்துறை உதவி பேராசிரியை எம்.ராதிகா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி நன்றி கூறினார். நிகழ்வில் கல்லூரி டீன் பேராசிரியர்.எஸ்.சுந்தர்ராஜ் மற்றும் பேராசிரிய பெருமக்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

## குமரி மாவட்டத்தில்

# வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் அமைச்சர் கலந்தாய்வு



நாகர்கோவில், ஜூலை. 18

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை துறை சார்பில் பல்வேறு திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இது குறித்துதுறை அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலெக்டர் பிரதாப் தலைமை வகித்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ்குமார் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு கூறியதாவது:

குமரி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து திட்டப்பணிகளையும் தரமாகவும், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள்ளும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

குறிப்பாக, நபார்டு, முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம் மற்றும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம், நமக்கு நாமே திட்டம் உள்ளிட்ட முதன்மைத் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் குடிநீர் விநியோகம், தெருவிளக்கு வசதிகள் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு அந்தந்த துறை அலுவலர்கள் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணிகளில் ஏதேனும் தொய்வு ஏற்பட்டால், அதனை உடனுக்குடன் கண்டறிந்து நிவர்த்தி செய்ய வேண்டும். அரசின் நலத்திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் தகுதிவாய்ந்த அனைத்துப் பயனாளிகளுக்கும், கிராமப்புறங்களின் கடைக்கோடி பகுதி வரை சென்றடைவதை துறை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து உறுதி செய்திட வேண்டும். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## புதுக்கடை அருகே

# குழந்தை இல்லாத ஏக்கத்தில் இளம் பெண் தீக்குளித்து தற்கொலை

புதுக்கடை, ஜூலை. 18

புதுக்கடை அடுத்த தேங்காய் பட்டணம் பகுதி கும்பகோடு பின்னக்காட்டு விளை என்ற இடத்தை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன் மனைவி ஜெனிபா (31). இவர்களுக்கு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்று உள்ளது. ஆனால் இதுவரையிலும் இந்த தம்பதிக்கு குழந்தைகள் இல்லை. இதனால் ஜெனிபா மனவருத்தத்தில் இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று ஜெனிபா வீட்டில் தனியாக இருக்கும்போது, வாழ்க்கையில் வெறுப்புற்று தீக்குளித்து தற்கொலை செய்துள்ளார். இது குறித்து ராதாகிருஷ்ணன் ஜெனிபாவின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தார். உடனடியாக ஜெனிபாவின் அண்ணன் முருகன் என்பவர் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். புதுக்கடை இன்ஸ்பெக்டர் மீனா தலைமையிலான போலீசார் சம்பவ இடம் சென்று ஜெனிபா உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
"வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக"
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தினதமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்ற வழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்.
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கிழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200, 70102 64701


# பணி நிரந்தரம் ஊதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



மதுரை, ஜூலை 18

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களாக பணிபுரியும் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் ஊதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக முழுவதும் உள்ள அனைத்து மின்வாரிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர் அந்த வகையில் மதுரை புதூர் பகுதியில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகம் முன்பு முன்னாடியே ஒப்பந்த தொழிலாளர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பியபடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அடுத்த கட்ட நடவடிக்கையாக சென்னையில் மிகப்பெரிய அளவில் அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களையும் திரட்டி பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் செய்ய இருப்பதாக தெரிவித்தனர்.

# குழித்துறை நீதிமன்ற சாலையில் ஆபத்தான நிலையில் பயணிகள் நிழலகம்: பொதுமக்கள் கோரிக்கை




மார்த்தாண்டம், ஜூலை.18

கன்னயாகுமரி திருவனந்தபுரம் சாலையில் மார்த்தாண்டம் அருகே குழித்துறை சந்திப்பு பகுதி உள்ளது. இது குதித்துறை நகராட்சியின் முக்கிய சந்திப்பு பகுதியாகும். இந்த சந்திப்பிலிருந்துகுழித்துறை நீதிமன்றம், விளவங்கோடு தாலுகா அலுவலகம், மற்றும் பல அரசு அலுவலகங்கள் செல்லும் முக்கிய சாலை உள்ளது. மேலும் அருமனை, பனச்சமூடு, மற்றும் மலையோர கிராமங்களுக்கும் குழித்துறை சந்திப்பு வழியாக பஸ்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் செல்வதால் இந்த பகுதி பரபரப்பாக காணப்படும். இந்த பகுதிகளுக்கு செல்பவர்கள் பஸ் ஏற லட்சுமி தியேட்டர் எதிரில் பஸ் நிறுத்தம் .மற்றும் உள்ள பயணிகள் நிழலகம் உள்ளது. இந்த நிழலகம் தற்போது மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது.

குறிப்பாக நிழலச தூண்கள் சாய்ந்த நிலையில், எந்நேரமும் இடிந்து விழும் அபாயத்துடன் காணப்படுகிறது இதனால் தினமும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் அச்சத்துடன் பேருந்துக்காக காத்திருக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பலமுறை அதிகாரிகளிடம் புகார் அளிக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஒரு அசம்பாவிதம் நடந்த பின்னரே நடவடிக்கை எடுப்பார்களா என கேள்வி எழுப்பும் பொதுமக்கள், மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு நிழலகத்தை சீரமைத்து உயிர் ஆபத்தை தவிர்க்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சேலம் மாவட்டத்தில் "உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டம்



சேலம், ஜூலை 18

பொதுமக்களின் இடங்களுக்கே சென்று குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கு சென்று பணியாற்றும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அந்த வகையில் சேலம் மாவட்ட பொதுமக்களின் குறைகளை கேட்டு அறியும் திட்டமான உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம் முகாம் நேற்றைய தினம் சேலம் மாவட்டம் மேட்டூரில் தொடங்கப்பட்டது. மேட்டூர் வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களில் மாவட்ட அளவிலான அனைத்து துறை அரசு அலுவலர்கள் இரண்டு தினங்கள் கள ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்து தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேட்டூர் வட்டத்தில் களப்பணிக்கு செல்லும் அலுவலர்களால் இன்றைய தினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், சத்துணவுக் கூடங்கள், வேளாண் கிடங்குகள், பள்ளிகள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம், தெருவிளக்குகளின் செயல்பாடுகள், பூங்காக்கள், நூலகங்கள், பேருந்து நிலையங்கள், பொது மற்றும் சமுதாய கழிவறைகள் ஆகியவற்றை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேட்டூர் வட்டம் மேச்சேரி ஊராட்சி ஒன்றியம் செம்மனூர் ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு வகுப்பறைகள், மாணவ மாணவியர்கள் வருகை பதிவேடு, காலை உணவு திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை உள்ளிட்டவை குறித்து பார்வையிட்டு மாணாக்கர்களை படிக்க சொல்லி அவர்களின் கற்றல் திறன் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாணவ மாணவியர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் அரங்கனூர் கால்நடை மருத்துவமனையால் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நாள்தோறும் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை, கால்நடைகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும் கால்நடை மருத்துவரிடம் கேட்டறியபட்டது. சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பில் செயல்படும் புக்கம்பட்டி ஊராட்சி பால் குளிர்விப்பு நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு பால் கொள்முதல், பால் பரிசோதனை மேற்கொள்ளும் முறை, பால் குளிர்விப்பு உள்ளிட்ட செயல்பாடுகள் குறித்தும் கேட்டறியப்பட்டது. முக்கம்பட்டி அரசு துணை சுகாதார நிலையத்தில் மருத்துவ பயனாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது. அது போன்று மேச்சேரி சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் சொத்து ஆவணங்கள், வில்லங்கச் சான்றுகள், விற்பனை பத்திரங்கள் உள்ளிட்ட கோப்புகள் மற்றும் பதிவேடுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்களுக்கு விரைவான சேவையினை வழங்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆடு ஆராய்ச்சி நிலையத்தில் ஆடு வளர்ப்பு, தீவனங்கள் மற்றும் ஆராய்ச்சி பணிகள் உள்ளிட்ட வை குறித்து கேட்டறியப்பட்டது. மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் காலை முதல் கள ஆய்வு மேற்கொண்ட அனைத்து துறை அரசு அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் ஆலோசனை நடத்தினார்.



தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் காரல் மார்க்ஸ் திருமண மண்டபத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் அரசின் திட்டங்கள், சேவைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மேற்கொண்ட களஆய்வு தொடர்பான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மதுமதி, மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம், தனி துணை ஆட்சியர் ஷெர்லிஏஞ்சலா, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் ஜார்ஜ் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பயிர் சாகுபடிக்கு தேவையான ரசாயன உரங்கள் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளது: ஈரோடு ஆட்சியர் தகவல்



ஈரோடு ஜூலை 18

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் போது தெரிவித்ததாவது, ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 768 மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 17.07.2026 முடிய 209.4 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 59.62 அடியாகவும். 7.13 மி.கன அடிநீர் இருப்பும் உள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில்உள்ளவட்டாரவேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், பயிர் சாகுபடிக்குத் தேவைப்படும் பூச்சிமருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவை போதுமான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் பயனாளிகள் அனைவரும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே, பி.எம்.கிசான் தவணை தொகை தொடர்ந்து கிடைத்திட இதுநாள் வரை தனித்துவ அடையாள எண் பெறாத பயனாளிகள் தங்கள் வட்டார வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனித்துவ அடையாள எண் பெற்றுக்கொள்ளலாம். மேலும், பி.எம். கிசான் கணக்குடன் நிலம் தொடர்பான விபரங்களை இணைத்தல், ஆதார் விபரங்களை வங்கிக் கணக்குடன் இணைத்தல் மற்றும் தங்களது அடையாளத்தை இணைய வழியில் உறுதிபடுத்துதல் போன்ற விபரங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு அத்திட்டத்தின் பயன்களை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் . இவ்வாறு அவர் கூறினார் .

# ஆடி முதல் வெள்ளி கிருஷ்ணகிரி பெரியமாரியம்மன் கோவிலில் 1008 விளக்குகளுடன் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம்



கிருஷ்ணகிரி ஜூலை 18

ஆடி மாதத்தின் முதல் நாளான இன்று (ஜூலை 17, 2026) ஆடி முதல் வெள்ளி அனுசரிக்கப்படுவதையொட்டி, தமிழகம் முழுவதும் உள்ள அம்மன் கோயில்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. கிருஷ்ணகிரி சென்னை சாலையில் பிரசித்தி பெற்ற பெரியமாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் வாரம் வெள்ளிக்கிழமை தோறும் அபிஷேகங்கள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்று வருவது வழக்கம். கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள அம்மன் கோயில்களில் அதிகாலை முதலே சிறப்பு அபிஷேகங்களும், வழிபாடுகளும் நடைபெற்றன. ஆடி முதல் வெள்ளியான இன்று பெரியமாரியம்மன் கோவில் முழுவதும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு 1008 விளக்குகளுடன் மிகப்பிரமாண்டமாக அபிஷேகங்கள் மற்றும் பல வகையான பூஜைகள் நடைபெற்றன. கிருஷ்ணகிரி பகுதி மக்கள் மட்டுமின்றி, அருகில் உள்ள கிராமத்தில் இருந்து ஏராளமான பக்தர்கள் பெரிய மாரியம்மன் கோவிலில் குவிந்தனர். அங்கு குவிந்த பக்தர்கள் அனைவரும் நீண்ட வரிசையில் காத்திருந்து அம்மனை தரிசித்து சென்றனர். கோவில் முழுவதும் 1008 விளக்குகளை ஏற்றி வைத்ததை பார்த்த பக்தர்கள் பிரமிப்புடன் பார்த்துச் சென்றனர். பெண்கள் பலர் கோயில்களில் பொங்கல் வைத்தும்,

பால் அபிஷேகம் செய்தும் அம்மனை தரிசனம் செய்தனர். இந்த ஆண்டு ஆடி மாதப் பிறப்பும், வெள்ளிக்கிழமையும் ஒரே நாளில் இணைந்துள்ளதால் பெரிய மாரியம்மனை வழிபடுவது சகல சௌபாக்கியங்களையும் தரும் என்பது நம்பிக்கை. மிகப்பிரமாண்டமாக 1008 விளக்குகளை ஏற்றி வைத்து கோவில் முழுவதும் அலங்கரிக்கப்பட்டதை பார்த்த பொதுமக்கள் அனைவரும், சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த ஆலய அறங்காவலர் முத்துக்குமார் மற்றும் ஆலய விழா குழுவினரை பாராட்டி சென்றனர்.

# புலிகள் காப்பகத்தில் அனுமதியின்றி செயல்பட்ட 63 விடுதிகளுக்கு சீல் வைப்பு

ஈரோடு ஜூலை 18

சத்திய மங்கலம் புலிகள் காப்பகத்தில் அனுமதியின்றி தங்கும் விடுதிகள் செயல்பட்டு வருவதாகவும் இதனால் மலைப்பகுதியில் சுற்று சூழல் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது.இந்தவழக்கைவிசாரித்தஐகோர்ட்டு சட்ட விரோதமாக செயல் படும் விடுதிகளை அகற்ற வேண்டும் என்று உத்தர விட்டது.

இதையடுத்து முதல் கட்டமாக புலிகள்காப்பகத்தில் உள்ள 42 விடுதிகளுக்கு சீல் வைக்கப்பட்டது. இந்த நிலையில் தாளவாடி ஆசனூர் தலமலை கேர்மாளம போன்ற ஊராட்சிகளில் செயல் பட்டு வந்த மேலும் 21 தங்கும் விடுதிகளுக்கு சீல் வைக்கப்பட்டன. ஆக மொத்தம் புலிகள் காப்பகத்தில் அனுமதியின்றி செயல் பட்ட 63 விடுதிகளுக்கு ஐகோர்ட்டு உத்தரவுப்படி சீல் வைக்கப்பட்டன.

# புதிய மின்னணு குடும்ப அட்டைகளை போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் வழங்கினார்



சேலம், ஜூலை 18

போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் நேற்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் முன்னிலையில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 1695 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார். தமிழ்நாடு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். சென்னையில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் புதிய குடும்ப அட்டைகளை வழங்கியதன் தொடர்ச்சியாக பிற மாவட்டங்களில் உள்ள பயனாளர்களுக்கும் உடனடியாக குடும்ப அட்டைகளை வழங்கிட உத்தர விட்டார். அதன்படி சேலம் மாவட்டத்தில் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் விழா நடைபெற்றது. சேலம் மாவட்டத்தில் உள்ள 14 வட்டங்களில் 10,93,850 அரிசி பெறும் குடும்ப அட்டைகள், 24,446 சர்க்கரை குடும்ப அட்டைகள் மற்றும் 1956 பண்டகம் இல்லா குடும்ப அட்டைகள் என மொத்தம் 11,20,252 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். மேலும் சேலம் மாவட்டத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ் 1,315 முழுநேரம் மற்றும் 462 பகுதி நேரம் என மொத்தம் 1777 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகிறது. இந்த கடைகளின் மூலம் பொது மக்களுக்கு தேவையான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு, பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி சேலம் மாவட்டத்தில் கடந்த ஜூலை 2026 ல் குடும்ப அட்டைதாரர்களுக்கு 20,200 மெ.டன் அரிசி 1,663 மெ. டன் சர்க்கரை, 2014 மெ.டன் கோதுமை, 98 மெ. டன் துவரம் பருப்பு, 9,89,000 பாக்கெட்டுகள் பாமாயில், 180 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் வட்டத்தில் 49, எடப்பாடி வட்டத்தில் 118, கெங்கவல்லி வட்டத்தில் 54, காடையாம்பட்டி வட்டத்தில் 54, மேட்டூர் வட்டத்தில் 119, ஓமலூர் வட்டத்தில் 101, பெத்தநாயக்கன் பாளையம் வட்டத்தில் 135, சேலம் வடக்கு வட்டத்தில் 244, சேலம் தெற்கு வட்டத்தில் 167, சேலம் மேற்கு வட்டத்தில் 277, சங்ககிரி வட்டத்தில் 102, தலைவாசல் வட்டத்தில் 28, வாழப்பாடி வட்டத்தில் 220, மற்றும் ஏற்காடு வட்டத்தில் 27 என மொத்தம் 1695 பைனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு மக்களின் அனைத்து தரப்பு கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதே அரசின் முதற்கட்ட பணியாக செயல்பட்டு வரும் தமிழக முதல்வரின் இத்தகைய நலத்திட்டங்களை பொதுமக்கள் பெற்று பயனடைய வேண்டும் என போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் கூறினார்.

# பெருந்துறையில் விசிக ஆலோசனைக் கூட்டம்

## ஆகஸ்ட் 18 திருப்பூர் மண்டல செயற்குழு கூட்டத்திற்கு திரளாக பங்கேற்க தீர்மானம்



ஈரோடு ஜூலை 18

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்பி., பிறந்தநாளையொட்டி ஆகஸ்ட் 17ஆம் தேதி உளுந்தூர்பேட்டையில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு நடைபெற உள்ளது.

இதனைத் தொடர்ந்து, வருகின்ற 18ஆம் தேதி திருப்பூர் லட்சுமி திருமண மண்டபத்தில் எழுச்சித்தமிழர் தலைமையில் மேற்கு மண்டல செயற்குழு கூட்டம் மிக பிரமாண்டமாக நடைபெற இருக்கிறது.

இக்கூட்டத்தை எவ்வாறு சிறப்பு செய்ய வேண்டும், பொதுமக்களை எவ்வாறு பெருந்திரளாக அழைத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மாவட்ட தலைமை அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் வி. விஜயபாலன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இதில் பெருந்துறை மாவட்ட துணை செயலாளர்கள் சி.அண்ணாமலை, மு.கிருஷ்ணமூர்த்தி, கே.ஜெயக்குமார், ஜெ.கவிதா, ஜெனிபர் ரோஸ்மின் மேரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கே.அமுதா, R.ராஜேஷ்குமார், மகளிர் விடுதலை இயக்க மாவட்ட செயலாளர் ஆ.சுபாஷினி, இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர்கள் அ.மணிகண்டன், D.நந்தினி, பெருந்துறை ஒன்றிய செயலாளர் (கிழக்கு) அ.ஜெகதீசன், பெருந்துறை நகர செயலாளர்

மு.முருகசாமி, கிழக்கு பெருந்துறை ஒன்றிய பொருளாளர் ரா.ஜீவா, பெருந்துறை ஒன்றிய துணை செயலாளர் சௌந்தர், பெருந்துறை ஒன்றிய பொருளாளர் E.தனலட்சுமி, கிறிஸ்துவ சமூக நீதி பேரவை ஒன்றிய செயலாளர் செ.தீமோத்தேயு, பெருந்துறை ஒன்றிய செயலாளர் (வடக்கு) ச.குமார், சென்னிமலை நகர செயலாளர் விஜயா மற்றும் சென்னிமலை ஒன்றிய செயலாளர் ஜெபராஜ் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் அனைவரும் பொறுப்புடன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## ஆவின் பால் கொள்முதல் விலையை உயர்த்திய அரசுக்கு நன்றி

# தனியார் பால் நிறுவனங்களின் கொள்முதல் விலைக்கேற்ப ரூ.45 ஆக உயர்த்த வேண்டும்: தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்கம் கோரிக்கை




மதுரை, ஜூலை 18

ஆவின் தானியங்கி பால் விற்பனை இயந்திரங்களை முதற்கட்டமாக ஊட்டி மற்றும் கொடைக்கானலில் அறிமுகப்படுத்தியிருப்பது அந்த பகுதிகளின் சூழ்நிலைக்கு ஏற்றதாகும். ஆனால் நகர்ப்புறங்களில் இதே முறையை செயல்படுத்துவது சாத்தியமில்லை.

மதுரை ஆவின் அலுவல வளாகத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்கம் சார்பில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட செயலாளர் எஸ். சுப்பிரமணி "தனியார் நிறுவனங்கள் வழங்கும் விலைக்கு நிகராக அரசு கொள்முதல் விலையை உயர்த்துவதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த உயர்வு இல்லையெனில் ஆவினுக்கு பால் வரத்து மேலும் குறைந்து, நுகர்வோருக்கு தேவையான அளவில் பால் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்படும். ஆவின் தானியங்கி பால் விற்பனை இயந்திரங்களை முதற்கட்டமாக ஊட்டி மற்றும் கொடைக்கானலில் அறிமுகப்படுத்தியிருப்பது அந்த பகுதிகளின் சூழ்நிலைக்கு ஏற்றதாகும். ஆனால் நகர்ப்புறங்களில் இதே முறையை செயல்படுத்துவது சாத்தியமில்லை. இன்றைய சூழலில் மக்கள் வீட்டிலிருந்தபடியே தேவையான பொருட்களை ஆர்டர் செய்து பெறும் பழக்கத்திற்கு மாறியுள்ளனர். பாத்திரம் எடுத்துக்கொண்டு தானியங்கி இயந்திரங்களுக்கு சென்று பால் வாங்கும் நடைமுறை நகர்ப்புறங்களில் பெரிய அளவில் வெற்றி பெற வாய்ப்பில்லை. எனவே ஆவின் பால் விற்பனையை அதிகரிக்க வீடு தோறும் பாக்கெட் பால் விநியோகத்தையே அரசு வலுப்படுத்த வேண்டும். தற்போது அரசு அறிவித்துள்ள கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.35 என்றாலும், கொழுப்பு மற்றும் இதர சத்துக்களின் அடிப்படையில் விவசாயிகளுக்கு நடைமுறையில் ரூ.32.50 முதல் ரூ.33 வரை மட்டுமே கிடைக்கிறது. அதனுடன் அரசின் ரூ.3 ஊக்கத்தொகை சேர்த்தாலும் ரூ.35.50 மட்டுமே கிடைக்கிறது. மறுபுறம், தனியார் நிறுவனங்கள் குறைந்த கொழுப்பு சத்துள்ள பாலுக்கும் லிட்டருக்கு ரூ.42 முதல் ரூ.44 வரை வழங்குகின்றன. இதனால் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களை விட தனியார் நிறுவனங்களையே நாடுகின்றனர். இதுவே ஆவினில் பால் கொள்முதல் தொடர்ந்து குறைவதற்கான முக்கிய காரணமாக உள்ளது. அரசு தரமான பாலை மட்டுமே கொள்முதல் செய்து, நுகர்வோருக்கு தரமான பாலை வழங்கி வருகிறது. ஆனால் பால் உற்பத்தியாளர்களுக்கும் போட்டித்திறன் மிக்க விலை வழங்கப்பட வேண்டியது அவசியம்.

எனவே, ஆவின் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.45 ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர், ஆவின் ஆணையர், செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் பல முறை வலியுறுத்தியுள்ளோம். நலச்சங்க செயற்குழுவிலும் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளோம். இந்த கோரிக்கையை காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும். தற்போது தினந்தோறும் ஆவினுக்கு வரும் பால் அளவு தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பால் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும். எனவே பால் கொள்முதல் விலையை உடனடியாக ரூ.45 ஆக உயர்த்தி உற்பத்தியாளர்களை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்." இவ்வாறு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்கத்தின் மதுரை மாவட்ட செயலாளர் எஸ். சுப்பிரமணி தெரிவித்தார்.

# தலைமறைவு குற்றவாளி கைது

திருச்சி, ஜூலை 18

திருச்சி மாவட்டம் துவாக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட துவாக்குடி வடக்கு மலை ஜீவானந்தம் தெரு பகுதியைச் சேர்ந்த மலையன் மகன் லட்சுமணன் என்பவர் கடந்த வருடம் ஜூலை மாதம் இரண்டாம் வாரத்தில் துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியின் பின்புறம் உள்ள மைதானத்தில் துவாக்குடி காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி ரவுடி ரவி போஸ்கோ ரவுடி கருவா ராமச்சந்திரன் ரவுடி கோழிலோகேஷ் ஆகியோருடன் போண்டா சந்தோஷ் என்ற ஐந்து பேரும் முகத்தில் துணிகளை கட்டிக்கொண்டு கையில் இரும்பு ஆயுதங்கள் உடன் பாதசாரிகளை மிரட்டி அவர்களிடம் உள்ள பணம் நகையாகியவற்றை கொள்ளையடிக்க முயற்சி செய்த ரவி போஸ்கோ தருவ ராமச்சந்திரன் கோழி லோகேஷ் மூன்று ரவுடிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் போண்டா சந்தோஷ், வெங்காயம் லட்சுமணன் இருவரும் தலைமறைவாக இருந்து வந்த நிலையில் லட்சுமணன் என்ற வெங்காயம் லட்சுமணன் துவாக்குடி காவல் நிலைய உதவியாளர் நாகராஜ் அவர்களால் கைது செய்யப்பட்டு கணம் JM 6 நீதிமன்றத்தில் ஆச்சரியப்படுத்தப்பட்டு 15 நாட்கள் நீதிமன்ற காவல் அடைப்பு பெறப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் தலைமறைவாக உள்ள போண்டா சந்தோஷ் என்பவரை போலீசார் தேடி வருகின்றனர்.....





ஈரோடு மாவட்டத்தில் மக்கள்தொகைக்கணக்கெடுப்பு 2027இன் சுய கணக்கெடுப்பு பதிவினை பதிவிட்டு பதிவிடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி முகாம் அலுவலகத்தில் தொடங்கி வைத்தார்.

# சிவகங்கை மாவட்டம்கோட்ட அளவிலான மக்கள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை, ஜூலை 18

சிவகங்கை மாவட்டத்தில் கோட்ட அளவிலான மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் 24.07.2026 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வருவாய் கோட்டாட்சியார் அலுவலகங்களில் வருவாய் கோட்டாட்சியார் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் ப.ஆகாஷ், தெரிவித்துள்ளார்.



மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வட்டாட்சியர் திரு வீ சுந்தரவேல் தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலக சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் திரு பஞ்சாட்சரம், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் மற்றும் இதர அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்

# சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில் ஆடி களப பூஜை தொடங்குகிறது

சுசீந்திரம், ஜூலை 18

சுசீந்திரம் தாணுமாய சுவாமி கோவிலில் வருடம் தோறும் ஆடி மாதம் தாணுமாலய சுவாமிக்கும் திருவேங்கட விண்ணவரம் பெருமாளுக்கும் களப பூஜை நடைபெறுவது வழக்கம் அது போல இந்த ஆண்டு ஆடி மாத களப பூஜை இன்று சனிக்கிழமை தொடங்கி வருகிற 30ஆம் தேதி வரை 13 நாட்கள் நடக்கிறது இதை ஒட்டி தினமும் காலை 10 மணிக்கு திருவேங்கட விண்ணவரம் பெருமாள் ஆகிய உற்சவமூர்த்திக்கும் அதனைத் தொடர்ந்து தாணுமாய சுவாமிக்கும் களப பூஜை நடைபெறும் பூஜையை மாத்தூர் மடம் தந்தி சுஜித் நாராயண ரூ தலைமையில் தந்திரிமார்கள் செய்கிறார்கள் பின்னர் கோவிலை சுற்றிலும் நாலு முறை ஸ்ரீபலி வழிபாடும் நடத்தப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் களபம் வழங்கப்படும் நிறைவு நாளான 30ஆம் தேதி நீலகண்ட விநாயகர் சன்னதி அருகில் உதய அஸ்தமன பூஜை நடைபெறும் இதனை முன்னிட்டு நேற்று மாலை 6 மணிக்கு கற்கடக ஸ்ரீ பலி விழா நடக்கிறது இதை ஒட்டி கோவிலில்ரிஷபவாகனத்தில்சிவனும்கருடவாகனத்தில் பெருமாளும்இருக்கும்படிஅமரச்செய்துமேளதாளங்கள் முழங்க மூன்று முறை ஸ்ரீ பலி வழிபாடு நடைபெற்றது

# சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் 221வது நினைவஞ்சலி அனுசரிப்பு



ஈரோடு,ஜூலை 18

ஈரோடு மாவட்டம் அரச்சலூர் அருகே ஜெயராமபுரத்தில் அமைந்துள்ள மாவீரன் பொல்லான் அரங்கத்தில், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லானின் 221வது நினைவஞ்சலி நிகழ்ச்சி மரியாதையுடன் அனுசரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில், மாவீரன் பொல்லான் பேரவை சமூக நீதி கட்சியின் தலைவர் வடிவேல் ராமன், பேரவை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்து கொண்டு, மாவீரன் பொல்லானின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து, மாவீரன் பொல்லானின் தியாகப் பணிகளையும், நாட்டின் விடுதலைக்காக அவர் ஆற்றிய வீரச் செயல்களையும் நினைவுகூர்ந்து பேசினர். அவரது தியாக உணர்வும், தேசப்பற்றும் இளைஞர்களுக்கு முன்மாதிரியாக திகழ்கின்றன என்றும், அவரது வரலாற்றை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்த நினைவஞ்சலி நிகழ்வில் பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

# திமுக வார்டு செயலாளர் கம்பி வேலி சொந்த இடத்தில்அமைப்பதற்கு எதிர்ப்பு



திருப்பூர் அனுப்பர்பாளையம்:18

சொந்த இடத்தில் கம்பி வேலி அமைக்கும்பொழுது உடன்பிறந்த அண்ணன் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். மாநகர காவல் ஆணையாளரிடம் புகார் மனு வழங்கப்பட்டது.

15.வேலம்பாளையம்12 வார்டுவது திமுக வார்டு செயலாளராக செந்தில்குமார்உள்ளார். எங்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட ஒரு ஏக்கர் 97 சென்ட் அளவுள்ள இடத்தில் எனக்கும் எனது அண்ணன் அவர்களுக்கும் பாத்தியப்பட்ட பூமி உள்ளது.

இந்த இடத்தில் எனக்கு சொந்தமான டாக்குமெண்ட் அளவுள்ள 98 சென்ட் எனக்கு பாத்தியப்பட்டதாகும் இந்நிலையில் எனது அண்ணன் எனக்கு சொந்தமான பாத்தியப் பட்ட பூமியில் கம்பி வேலி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். அவருடன் அவரது மனைவியும் என்னை தகாத வார்த்தையாலும் உள்ளே வரக்கூடாது எனவும் மிரட்டி வருகின்றனர். இந்நிலையில் எனக்கு பாத்தியப்பட்ட பூமியில் உள்ளே வர அனுமதிக்காமலும் எனக்கு சொந்தமான இடத்தில் கம்பி வேலி அமைப்பதற்கு அனுமதிக்குமாறு காவல்துறை நடவடிக்கை எடுத்து விசாரித்து எனக்கு நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என மாநகர காவல் ஆணையாளரிடம் புகார் மனு அளித்தார்.

# நடப்பு கல்வியாண்டில் 12ம் வகுப்பு மாணவர்கள் முழுதேர்ச்சி அடைய வேண்டும்: கலெக்டர் அறிவுறுத்தல்



நாகர்கோவில், ஜூலை. 18

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கான மீள் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்மு.பிரதாப் கலந்துகொண்டு, தலைமையாசிரியர்களிடையே கலந்துரையாடி தெரிவிக்கையில்:

குமரி மாவட்டத்தில் பயிலும் 12ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் 100 சதவீத தேர்ச்சியுடன், தேர்ச்சி பெற்று சிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேர வேண்டும் என்பதற்காக மாவட்ட நிர்வாகம் பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது. மேலும் சென்ற ஆண்டில் தேர்ச்சியை நூறு சதவீதமாக எட்டுவதில் இடையூறாக இருந்த காரணிகள் எவை எவை என விவாதிக்கப்பட்டது. மாணவரின் வருகை என்பது மாணவரின் தேர்ச்சியை பாதிக்கும் காரணியாக அமைந்து விடக்கூடாது என்பதில் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் அதிக அக்கறை கொண்டு செயல்பட வேண்டும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் போதிய அளவு இல்லாத பள்ளிகளுக்கு பள்ளி மேலாண்மை குழு மூலமாகவும், பள்ளி நிர்வாகத்தின் மூலமாகவும் ஆசிரியர்களை ஒழுங்கு செய்து இக்கல்வி ஆண்டின் ஆரம்பம் முதலே கற்றல் கற்பித்தல் பணியை தொய்வின்றி மேற்கொண்டு, மாணவர் நலன் காத்திட அறிவுறுத்தப்பட்டது.

கல்வி கூடம் அல்லாது, பிற சூழல் காரணமாக மாணவர்கள் சரியாக கற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை இருப்பின் அதற்குஉரியவழிகாட்டுதல்கள்மாவட்ட நிர்வாகம் சார்பாக அளிக்கப்பட உள்ளது. எனவே அத்தகைய மாணவர்களை அடையாளம் கண்டு , ஆசிரியர்கள் அப்படிப்பட்ட மாணவர் நலனில் அக்கறையுடன் செயல்படவும், சிறு குறு தேர்வுகள் மூலம் மாணவர்களின் அடைவினை மேம்படுத்திடவும் வலியுறுத்தப்பட்டது. தொடர்ந்து வரும் பருவ தேர்வுகளில் மாணவர்கள் பெற்ற தேர்ச்சியினை மீள் ஆய்வு செய்வதன் மூலம் மாணவர்களுக்கான தேர்ச்சி சதவீதம் உயர வாய்ப்புள்ளது என்பதே கருத்தில் கொண்டு முதல் பருவ தேர்விலிருந்தே அதிக அக்கறை கொண்டு மாணவர்களுக்கு பாடங்களை புகட்டிடவும், மீண்டும் மீண்டும் திருப்புதல்களை வழங்கிடவும் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

மாணவர் எண்ணிக்கை குறைவாக காணப்படும் பள்ளிகளில் தேர்ச்சி சதவீதமும் குறைந்திருப்பது வருத்தம் அளிக்கும் ஒன்றாக காணப்படுகிறது. எனவே குறைந்த மாணவர் எண்ணிக்கை கொண்ட பள்ளிகள், மாணவர்களின் வாழ்வில் அக்கறை கொண்டு அனைத்து மாணவர்களையும் தேர்ச்சி பெற செய்ய வேண்டும் என்ற நோக்கில் கடினஉழைப்பினை தந்திடுதல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ச்சியாக, தேர்ச்சி குறைந்த பள்ளிகளை ஆய்வு மேற்கொண்டு மாதம் ஒருமுறை அறிக்கை சமர்பிக்க மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கூறினார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், மாவட்ட கல்வி அலுவலர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் ,துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி வாஞ்சிநாதன் 140வது பிறந்தநாளை முன்னிட்டு செங்கோட்டையில் உள்ள மணிமண்டபத்தில் (17.7.26) தமிழ்நாடு அரசின் சார்பில் தியாகி வாஞ்சிநாதன் திருவுருவச் சிலைக்கு தென்காசி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத்சிங், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன், ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். செங்கோட்டை நகர் மன்ற தலைவர் ராமலட்சுமி, தியாகி.வாஞ்சிநாதன் வாரிசுதாரர் வாஞ்சி கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உடன் உள்ளனர்.



தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் தலைமையகத்தின் அறிவுறுத்தலின்படி தருமபுரி மாவட்ட மை பாரத் கேந்திரா சார்பில் மை பாரத் கேந்திர தேசிய இளைஞர் தொண்டர்கள் வெங்கடேஷ், விக்னேஸ்வரி, ரேவதி, மோகன்ராஜ், பாவெல்ராஜ் மற்றும் சமூக ஆர்வலர் ஞானவேல் ஆகியோர் இணைந்து தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் பயிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மை பாரத் இணையத்தில் பதிவு செய்தனர். மேலும் மை பாரத் இணையதளத்தில் பதிவு செய்யும் முக்கியத்துவம் பற்றி மாணவ, மாணவிகளுக்கு மை பாரத் தருமபுரியின் அலுவலக பணியாளர் ரா. முனியப்பன் விவரித்தார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.